**<u>கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம்– 2018ம் ஆண்டு ஜீலை மாதம் 06ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது.</u>**

**<u>பொருள் எண்– 1</u>**

கடையநல்லூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் (TURIP)-2018–19ன் கீழ் ரூ.1.00 கோடிக்கு சாலைப்பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12981/2018/E3. நாள்.27.06.2018ன் படி மதிப்பீடுகள் தயார் செய்து அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சி பகுதியில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் (kfw) கீழ் பகிர்மான குழாய்கள் அனைத்து தெருக்களிலும் பதிக்கப்பட்டு பணிகள் முடிவடைந்து சேதமான சாலைகள், பதிக்கப்பட்ட பகிர்மான குழாய்களில் வீட்டு இணைப்புகளை மாற்றியமைத்ததால் சேதமான சாலைகள் மற்றும் மழை போன்ற இயற்கை இடர்பாடுகளால் சேதமுற்ற சாலைகளை கணக்கீடு செய்து ரூ.1.20 கோடிக்கு கீழ்கண்ட சாலைப் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் பெயர் | நீளம் மீட்டரில் | அகலம் மீட்டரில் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.8 மற்றும் 9 சிந்தாமதார் பள்ளிவாசல் தெரு, வார்டு எண்.31 பேட்டை மலம்பாட்டை சாலை, வார்டு எண்.3 ரயில்வே பீடர் ரோடு மற்றும் வார்டு எண்.22 இந்திராநகர் மங்கம்மாள் சாலை மற்றும் வார்டு எண்.32 ரகுமானியாபுரம் 2வது தெரு ஆகிய தெருக்களில் தார்சாலை அமைக்கும் பணி. | 1954.00 | 4 .00 மீ முதல் 6.00 மீ வரை | 120.00 |
| | மொத்தம் | 1954.000 | | 120.00 |

மேற்காணும் சாலை பணிகளை பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி செய்ய வேண்டியுள்ளதால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் (TURIP)-2018–19 ன் கீழ் அரசு மானியமாக பெற்று மேற்காணும் சாலை பணிகளை செய்திட தயார் செய்யப்பட்டுள்ள திட்ட பிரேரணைக்கு அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

1. அங்கீகரிக்கலாம்.
2. மேற்படி பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுத்திட்டம் (TURIP)- 2018–19ன் கீழ் ரூ.1.00 கோடிக்கு (தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்ட மானிய நிதி 0.38 கோடி + மாநில நிதிக்குழு மற்றும் மத்திய நிதிக்குழு மானிய நிதி 0.30 கோடி + மாநில நிதிக்குழு மானிய நிதி 0.22கோடி+நகராட்சி பங்குத்தொகை:0.10கோடி) என நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளதை அங்கீகரிக்கலாம்.
3. மேற்காணும் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யபட்ட தொகையில் நகராட்சியின் பங்குத்தொகை: ரூ.0.10 கோடி மற்றும் மதிப்பீட்டில் கூடுதல் தொகை ரூ. 0.20 கோடி ஆக மொத்தம் ரூ. 0.30 கோடியினை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.1760/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 156</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 2</u>**

இந்நகராட்சி கணினி பிரிவில் பராமரிக்கப்படும் கணினிகள் மற்றும் அனைத்து பிரிவிகளில் பராமரிக்கப்படும் கணினிகளுக்கு இரண்டு UPS கள் செயல்பட்டு வந்தது. மேலும் மேற்காணும் இரண்டு UPSகள் வாங்கப்பட்டு 10 வருடங்களுக்கு மேல் இயங்கி வந்த நிலையில் ஒரு UPS முற்றிலும் பழுதடைந்த செயல் இழந்து பழுதடைந்துவிட்டது. மேற்காணும் செயல் இழந்த UPS-னை தொழில் நுட்ப பணியாளரைக்கொண்டு பழுது நீக்க பணிகள் மேற்க்கொண்டபோது பழைய மாடல் UPS என்பதால் அதற்கான Spare Parts கிடைக்க பெறாததால் அதனை பழுது நீக்கம் செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. மேலும் தற்போது இயங்கி கொண்டிருக்கும் மற்றொரு UPS-யை கொண்டு அனைத்து கணினிகளையும் செயல்படுத்தும் போது அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு பழுதுகள் நீக்கம் செய்யப்பட்டு வரப்படுகின்றது. மேலும் இந்நகராட்சியில் தற்போது Centrilized web Based software (CWSS) நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்பட்டுவரப்படுகின்றது. இந்நிலையில் மேற்காணும் புதிய மென்பொருள் (CWSS) மூலம் வரிவசூல் மையம் E– சேவை மையம் மற்றும் அலுவலக பணிகள் இடைநிறுத்தமில்லாமல் தொடர்ந்து செயல்பட வேண்டியுள்ளதால் அவசர அவசியம் மற்றும் அத்தியவசியம் கருதி புதிதாக 5 KVA UPSகள் இரண்டு எண்ணம் வாங்கி வழங்கவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.7,00,000/–க்கு அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு இந்நகராட்சி தனி அலுவலர் 25.05.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கு அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1701 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 157</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 3</u>**

கடையநல்லூர் நகராட்சி விரிவாக்கப் பகுதியில் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்காணும் பகுதியில் தெருவிளக்குகள் இல்லாததால் புதிதாக தெருவிளக்குகள் அமைக்க கோரி அப்பகுதி பொது மக்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. மேலும் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் இந்நகராட்சி அனைத்துப் பகுதிகளையும் நேரில் ஆய்வு செய்யப்பட்டதில் தெருவிளக்கு இல்லாத பகுதிகளில் உடன் தெருவிளக்குகள் அமைக்கவும் மற்றும் தெருவிளக்கு இல்லாத மின்கம்பங்களில் உடன் மின் விளக்குகள் அமைக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ள பரிந்துறை செய்துள்ளார்கள்.

1. வார்டு எண்.9 பருத்தி விளைத்தெரு
2. வார்டு எண்.13 ஆலிம்ஷா தெரு
3. வார்டு எண்.24 பண்பொழி ரோடு (அயோத்தி நகர்)
4. வார்டு எண்.26 மலம்பாட்டை ரோடு மேல் பகுதி
5. வார்டு எண்.29 மதினா நகர் மேல்பகுதி
6. வார்டு எண்.30 புளியமுக்கு தெரு மேல் பகுதி
7. வார்டு எண்.31 நத்தகர் பள்ளிவாசல் தெரு மேல்பகுதி
8. வார்டு எண்.33 ரகுமானியாபுரம் மேல்பகுதி கொழும்பு தெரு
9. குமந்தாபுரம் முதல் EB அலுவலகம் வரை தேசிய நெடுஞ்சாலை–208

மேற்காணும் விபரப்படி வரிசை எண்.1 முதல் 9 வரை உள்ள பகுதிகளில் LEB விளக்குகள் 140 எண்ணம் அமைப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விண்ணப்ப கட்டணம் மற்றும் மதிப்பீட்டுக் கட்டணம் உத்தேசமாக ரூ.5,00,000/—க்கு தனி அலுவலரின் அங்கீகாரம் வேண்டிய சமர்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 581 /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 158</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்— 4</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண்.1406/2017/B1, நாள்.04.05.2018ம் தேதிய கடிதத்தில் திருநெல்வேலி, மண்டலத்தில் உள்ள 20 நகராட்சிகளின் தெருவிளக்கு பணிகளுக்கான விரிவான திட்ட மதிப்பீட்டின் (DPR) M/S DARASHAW & COMPANY PRIVATE LID. BANGALORE என்ற நிறுவனத்தின் மூலம் ESCO II DPR தயார் செய்து சமர்பிக்கப்பட்டதற்கு இந்நகராட்சியின் பங்குத்தொகை ரூ.4,28,097/—யை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் பெயரில் வங்கி வரைவோலையாக அனுப்பிவைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்காணும் பணிக்கான இந்நகராட்சியின் பங்குத்தொகை ரூ.4,28,097/—யை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் பெயரில் வங்கி வரைவோலையாக அனுப்பிவைக்க அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

அரசு திட்ட பணியாக இருப்பதால் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி தனி அலுவலர் அவர்கள் 10.05.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கான இந்நகராட்சியின் பங்குத்தொகை ரூ.4,28,097/— வழங்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். /2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 159</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்— 5</u>**

இந்நகராட்சி வார்டு எண்: 01, கதவு எண்:80, வடக்கு விளை காலணி தெரு, கிருஷ்ணாபுரம் கிராமம் — சர்வே எண்.1027/1 பாகம், 1027/2 பாகம்)—ல் 22063.38 சதுர மீட்டர் (5.45 ஏக்கர்) பரப்பளவுள்ள மனை இடத்தில் தரை தளம் மற்றும் முதல் தளத்தில் 889.46 சதுர மீட்டர் பரப்பளவில் 75 குதிரை திறனுடன் கூடிய இயந்திரங்கள் கொண்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஆலை (Packaged Drinking Water) அமைக்க திருமதி.செல்வி பாண்டியன் க/பெ.சீனிப்பாண்டியன் என்பவருக்கு இயந்திர நிறுவன அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. துப்புரவு ஆய்வர் மற்றும் துப்புரவு அலுவலரின் 06.07.2018ம் தேதிய அறிக்கையில் 75 குதிரை திறன் கொண்ட இயந்திரம் நிறுவுவதற்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஆலை நடத்துவதற்கும் அனுமதி வழங்க அறிக்கை செய்துள்ளதின் அடிப்படையில் மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மனுதாரர் மேற்படி விண்ணப்பத்தில் 75 குதிரை திறன் கொண்ட இயந்திரங்கள் நிறுவுவதற்கு கீழ்க்கண்ட துறையில் தடையின்மைச் சான்று பெற்றுள்ளார்.
    1. அரசு செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(1)த் துறை கடிதம் நகல்.

2. தமிழ்நாடு அரசு நாளிதழின் நிலத்தன்மை மாற்றம் சம்பந்தமான வெளியீடு நகல்.
3. நகர்ப்புற ஊரமைப்பு துணை இயக்குநர் (பொறுப்பு) திருநெல்வேலி மண்டலம் திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணை நகல்.
4. நகராட்சி ஆணையர், கடையநல்லூர் அவர்களின் கட்டிட அனுமதி உத்திரவு நகல்.
5. செயற்பொறியாளர் நீ.ஆ.அ/பொ.பது, சிற்றாறு வடிநில கோட்டம், தென்காசி (இ) குடியிருப்பு, குற்றாலம் அவர்களின் ஆட்சேபனை சான்று.
6. மாநில நீர்நிலை மற்றும் தரை மட்ட நீர் ஆராய்ச்சித் துறை சென்னை அவர்களின் கடிதம் நகல்.
7. தலைமை பொறியாளர், மாநில தரை மற்றும் மேற்பரப்பு நீர்வளங்கள் ஆராய்ச்சி மையம், சென்னை அவர்களின் கடித நகல்.
8. தலைமை பொறியாளர், பொதுப்பணித்துறை மற்றும் நீர்வள ஆராய்ச்சித் துறை அவர்களின் கடித நகல்.
9. மாவட்ட சுற்றுச்சூழல் நலப் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், திருநெல்வேலி அவர்களின் 31.12.2017ல் பெறப்பட்ட இசைவாணை மற்றும் அதற்கு எதிராக மனுதாரர் பெறப்பட்ட உயர்நீதிமன்ற தடை உத்தரவு நகல்

மேற்படி விபரங்கள் மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 2612/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 160</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 6</u>**

கடையநல்லூர் நகராட்சியில் அட்டவணையில் காணும் கீழ்க்காணும் பணிகளுக்கு இந்நகராட்சி தனி அலுவலர் 27.04.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு 15.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | நகர்மன்றத் தீர்மானம் எண்/ நாள் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | பொது நிதி –2018–19 | | | | |
| 1. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.29 மதினாநகர் கானாங் குளத்து அருகே பயனற்ற கழிப்பறையை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக **ON SITE Micro compost Centre** அமைக்கும் பணிக்கு | இந்நகராட்சி தனிஅலுவலரின் முன் அனுமதி நாள்.27.04.2018 | ரூ.9.00/– | திரு. M.மாலையப்பன்,<br>திரு. S.R.அமர்நாத், | 3.19% அதிகம்<br>0.25% குறைவு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.20 அட்டக்குளம் அருகே பயனற்ற இரண்டு கழிப்பறைகளை இடித்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக **ON SITE Micro compost Centre** அமைக்கும் பணிக்கு | இந்நகராட்சி தனிஅலுவலரின் முன் அனுமதி நாள்.27.04.2018 | ரூ.9.00/– | திரு. E.ராமசாமி<br>திரு. S.R.அமர்நாத், | 0.26% குறைவு<br>2.37% அதிகம் |
| 3. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண். 1 குமந்தாபுரம் நடுத்தெருவில் உள்ள பயனற்ற கழிப்பறையை இடத்து அப்புறப்படுத்திவிட்டு புதிதாக **ON SITE Micro compost Centre** அமைக்கும் பணிக்கு. | இந்நகராட்சி தனிஅலுவலரின் முன் அனுமதி நாள்.27.04.2018 | ரூ.9.00/– | திரு. M.மாலையப்பன்,<br>திரு. S.R.அமர்நாத், | 0.25% குறைவு<br>3.19% அதிகம் |
| 4. | இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.33 மேற்கு மலம்பாட்டை ரோடு, கிருஷ்ணாபுரம். மேற்கு பகுதியில் உள்ள இடுகாடு அருகேயுள்ள இடத்தில் புதிதாக **ON SITE Micro compost Centre** அமைக்கும் பணிக்கு. | இந்நகராட்சி தனிஅலுவலரின் முன் அனுமதி நாள்.27.04.2018 | ரூ.8.50/– | திரு. M.மாலையப்பன்,<br>திரு. S.R.அமர்நாத், | 0.25% குறைவு<br>3.19% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த சதவீதத்தில் உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகாரம் செய்யலாம்.

அரசு திட்ட பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு இந்நகராட்சி தனிஅலுவலர் அவர்கள் 30.05.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சிப்பகுதியில் ON SITE Micro compost Centre அமைக்கும் பணிக்கு வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கு அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1327/2018/இ1)**

<u>தீர்மானம் எண். 161</u>

அங்கீகரிக்கப்படுகிறது.

<u>பொருள் எண்– 7</u>

**சட்டமன்ற தொகுதி மேம்பபாட்டு திட்டம்–2017–2018ன் கீழ்** கடையநல்லூர் நகராட்சி முத்துக் கிருஷ்ணாபுரம் தெற்குவிளைத் தெரு 7வது வார்டில் ஒரு போர்வெல் சிறு மின்விசை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தல் பணிக்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.131 நாள்–24.05.2018 அன்று அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு 14.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளை அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளவர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | டெபாஸிட் செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| 1 | திரு.G.முப்புடாதி, ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 0.05% குறைவு | ரூ.2000/–க்கான செ.எண்.141/001/2/18–19/0002255. நாள்.14.06.2018ன் படி செலுத்தியுள்ளார். |

| | | | |
|---|---|---|---|
| 2 | திரு.G.முருகன்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 5.33% அதிகம் | ரூ.2000/–க்கான UNION Bank D.D.No..048503 நாள்.14.06.2018ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.05%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.G.முப்புடாதி, ஒப்பந்தக்காரர், ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். ஆகவே மேற்காணும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

சட்டமன்ற தொகுதி மேம்பபாட்டு திட்டத்தின் கீழ் உள்ள பணிகளாக உள்ளதாலும், மாவட்ட ஆட்சித்தலைவர் திருநெல்வேலி அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் தெரிவித்துள்ள படியும், பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு இந்நகராட்சி தனிஅலுவலர் அவர்கள் 14.06.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கு அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 3327/2017/இ1)**

**<u>தீர்மானம் எண். 162</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 8</u>**

**சட்டமன்ற தொகுதி மேம்பபாட்டு திட்டம்–2016–2017ன் கீழ்** கடையநல்லூர் நகராட்சி இரசாலியாபுரம் தெரு, 12வது வார்டு அல்லிமூப்பன் தெரு 13வது வார்டு பெண்கள் பள்ளி எதிர்புறம் பேவர்பிளாக் இணைப்பு சாலை அமைத்தல் பணிக்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 154 நாள்–24.05.2018 அன்று அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு 14.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளை அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளவர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் | டெபாஸிட் செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| 1 | திரு.K.S.அப்துல் மாலிக்,<br>(பவர் ஏஜெண்ட்)<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.17% குறைவு | ரூ.3000/–க்கான IOB KDNR வ.வ.எண்:133533 நாள்.14.06.2018ன் படி சமர்பித்துள்ளார். |
| 2 | திரு.P.M. அசன் முகம்மது,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 0.67% அதிகம் | ரூ.3000/–க்கான IOB KDNR வ.வ.எண்: 133534. நாள். 14.06.2018ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.17%** சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.K.S.அப்துல் மாலிக், (பவர் ஏஜெண்ட்) ஒப்பந்தக்காரர், ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். ஆகவே மேற்காணும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

சட்டமன்ற தொகுதி மேம்பபாட்டு திட்டத்தின் கீழ் உள்ள பணிகளாக உள்ளதாலும், மாவட்ட ஆட்சித்தலைவர் திருநெல்வேலி அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் தெரிவித்துள்ள படியும், பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு இந்நகராட்சி தனிஅலுவலர் அவர்கள் 14.06.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கு அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 117/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 163</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 9</u>**

கடையநல்லூர் நகராட்சியில் அட்டவணையில் காணும் கீழ்க்காணும் பணிகளுக்கு இந்நகர் மன்ற தீர்மான எண்.40 நாள்.12.02.2018 அன்று அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்வதற்கு 08.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | நகர்மன்றத் தீர்மானம் எண்/ நாள் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் ( திருவாளர்கள் ) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு ) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | பொது நிதி –2017–18 | | | | |
| 1. | இந்நகராட்சிப்பகுதி வார்டு எண்.1 குமந்தாபுரம் 0.80 இலட்சம் லிட்டர் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி மற்றும் 0.90 இலட்சம் லிட்டர் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிக்கு புதிய Chlorination Plant நிறுவுதல் பணிக்கு. | இந்நகர் மன்ற தீர்மான எண்.40 நாள்.12.02.2018 | ரூ.8.81/– | Excellent Chloro Systems<br>Shri sathya dyes and chemicals | 0.16% குறைவு<br>0.02% குறைவு |
| 2. | இந்நகராட்சிப்பகுதி வார்டு எண்.3 கிருஷ்ணாபுரம் பார்க் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி மற்றும் வார்டு எண்.9 முத்துக்கிருஷ்ணாபுரம் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு புதிய Chlorination Plant நிறுவுதல் பணிக்கு.. | இந்நகர் மன்ற தீர்மான எண்.40 நாள்.12.02.2018 | ரூ.8.81/– | Excellent Chloro Systems<br>Shri sathya dyes and chemicals | 0.16% குறைவு<br>0.02% குறைவு |
| 3. | இந்நகராட்சிப்பகுதி வார்டு எண். 13 இக்பால் நகர் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி மற்றும் வார்டு எண்.22 இந்திரா நகர் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிக்கு புதிய Chlorination Plant நிறுவுதல் பணிக்கு.. | இந்நகர் மன்ற தீர்மான எண்.40 நாள்.12.02.2018 | ரூ.8.81/– | Excellent Chloro Systems<br>Shri sathya dyes and chemicals | 0.16% குறைவு<br>0.02% குறைவு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இந்நகராட்சி இடைநிலை நீருந்து நிலையத்திலுள்ள 4.00 இலட்சம் லிட்டர் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிக்கு புதிய Chlorination Plant நிறுவுதல் பணிக்கு.. | இந்நகர் மன்ற தீர்மான எண்.40 நாள்.12.02.2018 | ரூ.4.41/– | Excellent Chloro Systems<br><br>Shri sathya dyes and chemicals | 0.16% குறைவு<br><br>0.02% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த சதவீதத்தில் உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகாரம் செய்யலாம்.

குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டு இந்நகராட்சி தனிஅலுவலர் 11.06.2018 அன்று முன்அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்காணும் பணிகளுக்கு வேலை உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளபட்டதற்கும் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்படுகிறது.

<u>ந.க.எண்.871/2017/இ1</u>

**<u>தீர்மானம் எண். 164</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 10</u>**

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு தேவையான நீல நிற டம்பர் பின்கள் 10 எண்ணம் ரூ.600000/–விநியோகம் செய்யும் பணிக்கு மதிப்பீட்டில் விநியோகம் செய்யும் பணிக்கு இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.108 நாள்–02.04.2018அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு 06.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளை அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளவர் | ஒப்பந்தப்புள் ளி விகிதம் | டெபாஸிட் செலுத்திய விபரம் |
|---|---|---|---|
| 1 | திரு. S. ஜெயசந்திரன்,<br>ஒப்பந்தக்காரர்,<br>சிங்கிலிப்பட்டி. | 20% குறைவு | ரூ.6000/–க்கான SBI PULIYANKUDI வ.வ.எண்.378788. நாள்.05.06.2018ன் படி சமர்பித்துள்ளார். |
| 2 | திரு. K.S. அப்துல்மாலிக்,<br>பவர் ஏஜெண்ட்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | 19.83% குறைவு | ரூ.6000/–க்கான SBI PULIYANKUDI வ.வ.எண். 378789. நாள்.05.06.2018ன் படி சமர்பித்துள்ளார். |

வரப்பெற்ற மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டைக் காட்டிலும் 20% சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு. S. ஜெயசந்திரன், ஒப்பந்தக்காரர் சிங்கிலிப்பட்டி என்பவர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். ஆகவே மேற்காணும் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு தனிஅலுவலர் அவர்கள் 06.06.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு தேவையான நீல நிற டம்பர் பின்கள் 10 எண்ணம் விநியோகம் செய்யும் பணிக்கு வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டதற்கும் அதற்கான செலவீனத்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1177/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 165</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 11</u>**

இந்நகராட்சிப் பகுதியிலுள்ள வீடுகள் மற்றும் இதர இனங்களுக்கு புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்க 1920ம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு எண்கள்.130, 131 (1), (2), (3, 132(1), 132A, 134, 135, 306, 308 மற்றும் 309 கீழ் உருவாக்கப்பட்ட துணை விதியினை கீழ்கண்டவாறு திருத்தம் செய்து அதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் அனுமதி பெறும் பொருட்டு கடிதம் அனுப்பவும், திருத்தம் செய்த விபரத்தினை பொதுமக்களுக்கு தெரிவிக்கும் வண்ணம் தினசரி நாளிதழ் மற்றும் அரசிதழில் பிரசுரம் செய்யவும், அதற்கான செலவுத்தொகைக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

கடையநல்லூர் நகராட்சியில் புதியதாக வீட்டுக்குழாய் இணைப்பு வழங்குதல், குடிநீர் இணைப்பில் மாற்றம், பழுது பார்த்தல் மற்றும் குடிநீர் இணைப்பு சரியான முறையில் வைத்து இருத்தல் இவைகள் அடங்கும். இதில் வீட்டு உபயோகத்திற்கு அல்லாத பிற இணைப்புகளும் அடங்கும். இந்த விதிகளின்கீழ் குடிநீர் வீணாவதைத் தடுக்கவும், குடிநீர் அளவைக் கணக்கிடவும் குடிநீர் இணைப்பில் அளவுமானி பொருத்துதல், குடிநீர்க்குழாய் இணைப்பில் தொட்டிகள் அமைத்தல் மற்றும் தீ விபத்திற்கு குடிநீர் வழங்குதல் ஆகியவைகள் இந்தத் துணைவிதிகளில் இடம் பெறுகின்றன.

<u>குடிநீர் விநியோக உப விதிகள்</u>

1) குடிநீர் இணைப்புப் பெறுவதற்காக கடையநல்லூர் நகராட்சி சட்டம் துணை விதிகள் சட்டம் 131 (1) – வது பகுதி (அ) 132–வது மற்றும் திருத்தப்பட்ட விதிகளின்படி ஒவ்வொரு குழாய் இணைப்பிற்கான விண்ணப்பத்தைக் கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் வீட்டு உரிமையாளரிடமிருந்து எழுத்து மூலமாக ஒப்புதல் கடிதம் பெற்று படிவம் (அ) இல் கண்டுள்ள கட்டண விகிதங்கள் மற்றும் பதிவுக் கட்டணம் ரூ.100/– (ரூபாய் நூறு மட்டும்) செலுத்தி ஆணையருக்கு அனுப்ப வேண்டும். பதிவுக் கட்டணம் செலுத்தி பதிவு செய்த நாள் கணக்கிட்டு முன்னுரிமைப் பட்டியல் தயாரித்து அதனடிப்படையில் குழாய் இணைப்பு வழங்கப்படும். மேலும் குறிப்பிடப்படும் வைப்புத் தொகை மற்றும் மதிப்பீட்டுக் கட்டணங்களை நகராட்சியில் செலுத்தி ஆணை பெற்று குழாய் இணைப்பிற்கான பணிகள் துவங்கப்பட வேண்டும். பதிவுக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் திரும்பி வழங்கப்பட மாட்டாது.

அ) குடிநீர் இணைப்பிற்காக மொத்த மதீப்பீட்டு கட்டணத்தில் 25 சதவீதம் நூற்றுவீதக் கட்டணம் (Centage) மற்றும் ஆய்வுக் கட்டணமாக வசூலிக்கப்படும்.

ஆ) குடிநீர்த் திட்டத்தில் அரசுக் கட்டிடங்ளுக்கு வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்கள் முன்பணமாக நகராட்சிக்கு செலுத்த வேண்டியது இல்லை. இணைப்பு ஆணை பெற்ற பின்பு செலுத்த வேண்டும்.

இ) மேற்கண்ட கட்டணங்களில் வைப்புத் தொகையைத் தவிர இதர கட்டணங்கள் எதுவும் திருப்பித் தரப்படமாட்டாது. மேலும் வேறு இனங்களுக்கு வரவு வைக்கப்படமாட்டாது. அத்துடன் செலுத்திய தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.

ஈ) குழாய் இணைப்பு பணிகளை உரிமையாளரே தகுதி வாய்ந்த குழாய் பொருத்துநரால் தனது சொந்தச் செலவில் நகராட்சி பகிர்மானக்குழாய் வரை அமைக்கப்பட வேண்டும்.

2) குடியிருப்பு பயன்பாட்டிற்கோ அல்லது குடியிருப்பு அல்லாத பயன்பாட்டிற்கோ வழங்கப்படும் இணைப்புகளுக்கு அளவுமானிகள் பொருத்தப்பட்டு அளவுமானி முறையில் கட்டணம் வசூல் செய்யப்படும். ஏற்கனவே அளவுமானி பொருத்தப்படாமல் குழாய் அளவு விகிதத்தில் (Tap rate) உள்ள இணைப்புகளுக்கு 60 நாட்களுக்குள் அறிவிப்பு அனுப்பி அளவுமானி இணைப்பாக மாற்றப்படும். அவ்வாறு மாற்றப்படாமல் இருந்தால் மறு அறிவிப்பின்றி இணைப்புத் துண்டிக்கப்படும்.

3) வழங்கப்படும் குடிநீர் குடும்பக் காரணங்களுக்கானதா அல்லது குடும்பக் காரியங்களுக்கல்லாததா? என்பது பற்றி திருத்தப்பட்டுள்ள 1920–ம் ஆண்டு கடையநல்லூர் நகராட்சி சட்டத்தின் 131–வது பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விரிவுரையின்படி ஒவ்வொரு தருணத்திலும் முடிவு செய்யப்படும்.

4) அ) ஒரே இணைப்பின் வாயிலாக குடியிருப்பு பயன்பாட்டிற்கும் அவையல்லாத பிற பயன்பாட்டிற்கும் சேர்ந்து எடுக்கப்படும் குடிநீர் குடியிருப்புக்கு அல்லது பிற பயன்களுக்கான குடிநீருக்குரிய வீதங்களில் கட்டணம் வசூலிக்கப்படும். சொத்துவரி விதிப்பில் இருந்து விலக்களிக்கப்பட வேண்டிய இனங்களுக்கு மன்ற அனுமதியுடன் குடிநீர் இணைப்பு வழங்கப்படும்.

ஆ) நகராட்சி மன்றத்தின் உரிமையான நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் இணைப்புகளும் கூட அளவுமானி கட்டண முறையில் இருக்க வேண்டியதோடு மேற்படி நிறுவனங்கள் பயன்படுத்தும் குடிநீருக்கான பயன்பாட்டை பொறுத்து குடியிருப்பு அல்லது அவையற்ற பிற பயன்களுக்கான வீதங்களில் கட்டணம் வசூலிக்கப்படும்.

இ) சொத்துவரி இல்லாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்கப்படமாட்டாது. ஏற்கனவே குடிநீர் இணைப்பு உள்ள கட்டிடங்களை இடித்துவிட்டு புதிதாகக் கட்டிடம் கட்டும்போதும், கூடுதல் கட்டிடம் கட்டும்போதும், பெரிய பழுதுகள் பார்க்கும்போதும், நகராட்சி குடிநீர் பயன்படுத்தப்பட்டாலோ அல்லது பயன்படுத்துவதாக ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் கண்டுபிடித்தாலோ குடியிருப்பு அல்லாத பயன்பாடாக கருதப்பட்டு வணிகக் காரியங்களுக்கான வீதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

ஈ) தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் அனுமதியுடனும் மற்றும் அவரால் ஒப்புதல் அளிக்கக்கூடிய வரையறைகளுடன் நகராட்சி மன்றம் தமது நகராட்சி எல்லைக்குட்படாத யாதொரு உள்ளாட்சிக்கோ அல்லது பிற நபருக்கோ குடிநீர் வழங்கலாம்.

5) ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரே ஒரு குடிநீர்க்குழாய் இணைப்பு மட்டும் தான் வழங்கப்படும். அத்தகைய இணைப்பைக் கட்டுப்படுத்த திருகு குழாய் நீர் வரத்து கட்டுப்பாட்டுமானி (Ferrules (or) Flow Control Valve) மற்றும் அடைப்பான் பொருத்தப்படும். வேறு பக்கத்து குடியிருப்பு இணைப்புகளிலிருந்தோ அல்லது கொடுக்கப்படவிருக்கும் பயன் இணைப்புகளிலிருந்தோ குடிநீர் வழங்கப்பட மாட்டாது.

விளக்கம் – இத்துணை விதிகளில் இடம் பெறும் குடியிருப்பு (வீடு) என்பது ஒரு பகுதியாக உள்ள கட்டிடம் அல்லது கட்டிடங்களையோ அல்லது தற்போதைய சொத்துவரிக்காக ஒரே பகுதியாகத் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டிடத்தைக் குறிக்கும்.

அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு இணைப்பு வழங்கப்படும்பொழுது எத்தனை குடியிருப்புகள் இருந்தாலும் தக்க அளவிலான குழாய் இணைப்புகள் கீழ்கண்டவாறு வழங்கப்படும்.

நான்கு குடியிருப்பு வரை 20 மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருங்குழாய் 1 எண்ணம், 15 மி.மீ

5 முதல் 8 குடியிருப்பு வரை 20 மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருங்குழாய் 2 எண்ணம், 15 மி.மீ

9 முதல் 12 குடியிருப்பு வரை 20 மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருங்குழாய் 3 எண்ணம், 15 மி.மீ

13 முதல் 16 குடியிருப்பு வரை 20 மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருங்குழாய் 4 எண்ணம், 15 மி.மீ

17 முதல் 20 குடியிருப்பு வரை 20 மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருங்குழாய் 5 எண்ணம், 15 மி.மீ

21 முதல் 40 குடியிருப்பு வரை 20 மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருங்குழாய் 6 எண்ணம், 15 மி.மீ

41 முதல் 70 குடியிருப்பு வரை 20 மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருங்குழாய் 7 எண்ணம், 15 மி.மீ

70 குடியிருப்புகளுக்கு மேல் 20 மி.மீ பயன்தரும் குழாய் திருகு குருங்குழாய் 8 எண்ணம், 15 மி.மீ

அடுக்குமாடி குடியிருப்புக்கு இணைப்பு வழங்கப்படும் போழுது ஒவ்வொரு குடியிருப்புக்கும் தனித்தனியாக வரிவிதிப்பு செய்து அனைத்து குடியிருப்போரிடமும் தனித்தனியாக வைப்புத்தொகை மற்றும் கட்டணம் வசூல் செய்யப்படும்.

*6)* (அ) கோவில்கள், மசூதிகள், மாதாகோவில்கள் ஆகியவற்றிற்குக் கொடுக்கப்படும் குடிநீர் அருந்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதர பயன்பாட்டிற்கு பயன்படுத்தினால் வணிக நோக்கத்திற்கு வசூல் செய்யப்படும் விலைவிகிதத்தில் கட்டணம் வசூல் செய்யப்படும்.

(ஆ) பெரிய கோவில்கள், மசூதிகள் , மாதாகோவில்கள் பொருத்தமட்டில் நீர்வழங்கும் விதம் தக்க அளவு கட்டுப்படுத்தப்பட்ட அளவுமானியுடன் குழாய் ஒன்று அனுமதிக்கப்படும். இணைப்பு விதிகள் கோயில்கள், மசூதிகள் மற்றும் மாதாகோயில்களுக்கான இணைப்புகளுக்கும் பொருந்தும்.

7) இத்துணை விதிகளுக்குட்பட்டு குடிநீர்க் குழாய்களில் உள்ள நீர்விசையின் அளவையும் நீரழுத்தத்தையும் கணக்கில் கொண்டு வீட்டுக் குழாய் இணைப்புகளின் அளவு அவற்றில் பொருந்த வேண்டிய அடைப்பான்கள் திருகுகள் மற்றும் இதர இனங்களையும் குழாய் நீளத்தையும் கணக்கிடுவதை பொறியாளர் அல்லது அவரது அனுமதி பெற்றவர் நிர்ணயம் செய்வார். அதற்குத் தக்கவாறு கீழ்க்கண்ட நிர்ணய அளவுகளின்படி அமைக்கப்படும்.

1) 15 மி.மீ. குழாய் இணைப்பு 10 மி.மீ. திருகு குறுங்குழாய் (30மீட்டர் நீளம் வரை)
2) 20 மி.மீ. குழாய் இணைப்பு 15மி.மீ. திருகு குறுங்குழாய் (90மீட்டர் நீளம் வரை)

இது தவிர வேறு அளவு தேவைப்பட்டால் அதை முடிவு செய்து தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் அனுமதி பெற்றுத்தான் இணைப்புகள் வழங்கப்படும் எல்லா

இணைப்புகளும் திருகு குறுங்குழாய் (Flow Control Valve) மற்றும் இதர துணைப்பாகங்கள் (accessories) சோதனை செய்து தர நிர்ணய சான்றிதழ் பெற்றதாகவோ அல்லது தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டதாகவோ இருத்தல் அவசியம். எக்காரணங்களைக் கொண்டும் இந்த நிர்ணய அளவு 15மி.மீக்கு மேல் இருத்தல் கூடாது. குடிநீர் நுகர்வோர் குழாய்கள் இணைப்புகள் ஆகியவை பொறியாளர் குறிப்பிடும்படி இந்தியத் தர நிர்ணய நிறுவனத்தின் விளக்கக்குறிப்பிற்கு உடன்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

8) குடிநீர் இணைப்பு எடுக்கப்படும் தலைப்பிடத்தில் நேர்மட்ட தூரம் 90 மீட்டருக்கு அதிகமாக இருப்பின் அத்தகைய வீட்டுக்குழாய் இணைப்புகள் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப்பொறியாளர் ஒப்புதலின் பேரில் மட்டுமே வழங்கப்படும். அத்தகைய பயன் இணைப்புகளின் தன்மை அளவு ஆகியவை தலைமைப்பொறியாளர் நிர்ணயம் செய்ததாக இருக்க வேண்டும்.

9) அ) குடியிருப்புகளுக்குக் கொடுக்கப்படும் இணைப்புகளைச் சேர்ந்த குழாய்கள், இணைப்புகள், யாவையும் நகராட்சி அலுவலர் அல்லது அவரது அனுமதி பெற்றவர்களால் எளிதாகப் பார்வையிட வசதியாக பொருத்துதல் வேண்டும். வீட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொருவரும் குடிநீர் இணைப்புகளைப் பார்வையிட வசதி செய்து தர வேண்டும். அவ்வாறு பார்வையிடத் தடை ஏற்படுத்தினால் அந்தக் குழாய் இணைப்புகளை பார்வையிட முடியாத காரணத்தால் குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

ஆ) குடிநீர்க் குழாயில் உள்ள திறப்பான்கள் தண்ணீரில் மூழ்கி இருக்கும் வகையில் அமைக்கக்கூடாது அல்லது குழாயிலிருந்து சிதறும் தண்ணீர் நகராட்சி யால் அமைக்கப்பட்டு இருக்கும் கழிவுநீர் கால்வாயிலோ அல்லது கழிவுநீர்க் குழாயிலோ செல்லும் வண்ணம் அமைக்கப்பட வேண்டும்.

10) அ) அளவுமானிகள் நகராட்சி ஆணையாளரின் ஒப்புதலுக்குட்பட்டு வீடுகளின் சொந்தக்காரர்களாலோ அல்லது வாடகைதாரர்களாலோ வழங்கப்பட வேண்டும். அமைக்கப்பட்டுள்ள அளவுமானிகள் எப்போதும் நகராட்சி மன்ற அலுவலர்களால் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற ஊழியர்களால் பூட்டி வைக்கப்பட்டு இருக்கும் அல்லது மூடி முத்திரை செய்யப்பட்டு இருக்கும். அளவுமானியின் அளவுகள் ஒவ்வொரு திங்களும் கணக்கிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வரப்படும்.

ஆ) அளவுமானி குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் வாங்கிப் பொருத்த வேண்டும். பராமரிப்பு கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.5/– வசூலிக்கப்படும்.

இ) வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் பொருத்தப்பட்ட அளவுமானிகள் பழுதடைந்துவிட்டால் சொந்தச் செலவில் உரிய அனுமதி பெற்று அளவுமானிகளைப் பழுதுபார்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். பழுதுபார்த்தல் பணியை நகராட்சி பொறியாளர் மேற்பார்வையில் இரண்டு திங்கள் காலத்திற்குள் ஆணையரின் உத்திரவு பெற்று செய்தல் வேண்டும். மேலும் பழுதுபார்க்கப்பட்ட அளவுமானியை சம்பந்தப்பட்ட அலகு அலுவலகத்தில் பொறுப்பு பொறியரிடம் ஒப்படைத்து சரியாக இயங்குகிறதா என ஆய்வு செய்தபின் மட்டுமே பொருத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் தருவாயில் குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

ஈ) அளவுமானி பழுதாகும் சமயங்களில் வழங்கப்படும் குடிநீருக்கான கட்டணம் 16வது ஆணை விதியில் வரையறுத்துள்ள விகிதங்களின்படி குடிநீர்க்கட்டணங்கள் வசூல் செய்யப்படும்.

11) உயர்த்தப்படவுள்ள குடிநீர் கட்டண வைப்புத்தொகை

அ) வீட்டுப் பயன்பாடு இணைப்பு ஒன்று – ரூ. 7500 /–

ஆ) வீட்டுப் பயன்பாடின்றி வணிக நோக்கு இணைப்பு ஒன்று – ரூ. 15000 /–

இ) தொழிற்சாலைகள் இணைப்பு ஒன்று – ரூ. 15000 /–

ஏற்கனவே உள்ள குழாய் இணைப்புகளுக்கு கூடுதல் வைப்புத் தொகையை இருசம தவணைகளில் ஆறு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும்.

12). உயர்த்தப்படவுள்ள குடிநீர்க் கட்டணம்

அ) குடிநீர் வீட்டுப் பயன்பாடு குழாய் அளவுமானி விகிதம் (Meter rate) பிரதி மாதம்

10000 லிட்டர் வரை குறைந்தபட்ச மாத கட்டணம் – ரூ. 150/–

10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் – ரூ. 10/–

ஆ) குடிநீர் வீட்டு பயன்பாடு இல்லாத இனங்கள் அளவுமானி விகிதம் (Meter rate)

பிரதி மாதம் 10000 லிட்டர் வரை குறைந்தபட்ச மாத கட்டணம் – ரூ. 300 /–

10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கு – ரூ. 20 /–

இ) தொழிற்சாலை உபயோகம் அளவுமானி விகிதம் (Meter rate) பிரதி மாதம்

10000 லிட்டர் வரை குறைந்தபட்ச மாத கட்டணம் – ரூ. 300/–

10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கு – ரூ. 20/–

மொத்தமாக குடிநீர் விநியோக (Bulk Supply of Water) கோரப்படும் இனங்களில் வணிக நிறுவனங்களிடம் வசூல் செய்யப்படும் விலைவிகிதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

13) அ) அளவுமானி முறையிலான கட்டணத்தைக் குடிநீர்க் கட்டணக் கேட்பு அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்த வேண்டும். ஒவ்வொரு காலாண்டு முடிந்த 10ம் நாளுக்குள் அனுப்பும் குடிநீர்க் கட்டணக் கேட்பு அறிவிப்பு அதற்கு முந்தைய காலாண்டு 10ம் நாள் பயன்படுத்தப்பட்ட குடிநீர் அளவுக்கு உரியதாகும்.

ஆ) மேற்கண்ட துணை விதிகளில் சொல்லப்பட்ட கட்டணங்கள் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் நகராட்சிக்கு செலுத்தப்படாமல் இருக்குமானால் ஆணையருக்கு எப்போது வேண்டுமானாலும் இணைப்பைத் துண்டிக்க அதிகாரம் உண்டு. நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் குடிநீர்க் கட்டணம் செலுத்தப்படாத இணைப்புகள் துண்டிப்பு செய்யும் பட்சத்தில்

ஏற்படும் கால இழப்புகளுக்கும், சேதங்களுக்கும் நகராட்சியின் ஆணையர் பொறுப்பு அல்ல. குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் தான் பொறுப்பு ஏற்க வேண்டும்.

இ) இந்தத் துணை விதிகளில் சொல்லப்பட்ட சட்ட திட்டங்களின்படி குடிநீர் வழங்குவதற்கு உரிய கட்டணம் முறைப்படி குறித்த காலத்திற்குள் செலுத்தப்படவில்லை என்றால் சொத்துவரி வசூல் செய்யும் முறையில் உள்ள விதிகளின்படி வசூல் செய்யப்படும்.

ஈ) நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் செலுத்தாததால் துண்டிக்கப்படும் இணைப்புக்கு துண்டிப்பு கட்டணம் ரூ.500/—ம் மறு இணைப்பு கட்டணம் ரூ.500/—ம் ஆக மொத்தம் ரூ.1000/—ம் வசூல் செய்யப்படும். இத்தொகை குடிநீர் கட்டணத்துடன் சேர்த்து வசூலிக்கப்படும் அல்லது தனியாக நகராட்சியில் செலுத்த வேண்டும்.

உ) குழாய் இணைப்பு துண்டிக்கப்பட்ட ஓராண்டு காலத்திற்குள் நிலுவையின்றி குடிநீர்க் கட்டணத்தைச் செலுத்தி மறு இணைப்பை பெற்றுக் கொள்ளத் தவறினால் குழாய் இணைப்பு நிரந்தரமாகத் துண்டிக்கப்பட்டதாக கருதப்படும்.

14) குடிநீர்பயன்படுத்தாத ஒரு காலாண்டின் பகுதிக்கான கட்டணத்தில் தள்ளுபடி எதுவும் அனுமதிக்கப்பட மாட்டாது. அவ்வாறு குடிநீர் பயன்படுத்தப்படாமலிக்கும் ஒவ்வொரு முழு காலாண்டிற்கும் ஆணையர் கட்டணத் தள்ளுபடி வழங்கலாம். ஆனால் அவ்வாறு குடிநீர் பயன்படுத்தாமல் இருந்தால் முன்கூட்டியே ஆணையருக்கு எழுத்து மூலமாகத் தகவலைத் தெரிவித்து குடிநீர் இணைப்பைத் தற்காலிகமாகத் துண்டிப்பு செய்து கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு துண்டிக்கப்படும் போது துண்டிப்புக் கட்டணம் ரூ.500/—ம் மறு இணைப்புக் கட்டணம் ரூ.500/—ம் ஒவ்வொரு முறையும் வசூல் செய்யப்படும்.

குறிப்பு: இந்தத் துணை விதிகளில் வரும் காலாண்டு என்பது மூன்று முழுத் திங்கள் அல்லது 90 நாட்கள் என்று பொருள் கொள்ள வேண்டும்.காலாண்டு என்பது கீழ்கண்டவாறு அமையும்

1) ஏப்ரல் முதல் ஜூன் வரை – முதல் காலாண்டு
2) ஜூலை முதல் செப்டம்பர் வரை – இரண்டாம் காலாண்டு
3) அக்டோபர் முதல் டிசம்பர் வரை – மூன்றாம் காலாண்டு
4) ஜனவரி முதல் மார்ச் வரை – நான்காம் காலாண்டு

15) அ) அளவுமானியின் அளவுகளிலோ அல்லது அளவுமானியில் பிற பழுதுகளோ இருந்தால் இது குறித்த விவரங்களுடன் அளவுமானியில் கணக்கு எடுக்கும் நாளிலிருந்து நான்கு வாரங்கள் அல்லது 30 நாட்களுக்குள் ரூ.250/— வைப்புத் தொகையாக செலுத்தி எழுத்து மூலம் அறிவிப்பு செய்து கொள்ள வேண்டும்.

ஆ) மேலே நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் செய்யப்படாத புகார்களோ அல்லது வைப்புத் தொகை செலுத்தாமல் செய்யப்படும் புகார்களோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இ) அளவுமானியின் அளவுகளில் அல்லது அளவுமானியில் பழுதுகள் இருப்பது பரிசீலனை செய்து ஆய்வுக்குப் பின் தெரியவந்தால் வைப்புத் தொகை திரும்பத் தரப்படும். அவ்வாறின்றி அளவுமானி சரியாக இயங்கி இருந்தால் அல்லது அளவுமானியில் பழுதுகள் இல்லை என்ற நிலை இருந்தால் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

16) குழாய் இணைப்பில் உள்ள அளவுமானி காட்டும் கணக்கீடு சரியானதாக இல்லை என்று கண்டுபிடிக்கப்பட்டாலும் அல்லது அளவுமானி ஒரு வார காலத்திற்கு மேலாகப் பழுது அடைந்து இருந்தாலும் குடிநீர் அளவு முந்தைய ஆண்டு இதே மாதத்தில் அல்லது அந்த திங்களில் பயன்படுத்தியதற்கான அளவுகளின் பதிவுகள் அல்லது அத்தகைய தகவல்கள் கிடைக்காத நேர்வுகளில் ஆணையர் மிகப் பொருத்தமானது எனக் கருதும் புள்ளி விவரங்களின அளவுகள் அந்தப் பிரச்சனைக்குரிய மேற்கண்ட கால கட்டங்களில் கட்டணம் வசூல் செய்வதற்கு அடிப்படையாகக் கொள்ளப்படும் எனவும் அவ்வாறு கணக்கிடப்படும் நீரின் அளவு அந்த கால அளவில் உண்மையில் பயன்படுத்தப்பட்ட நீர் அளவாகக் கருதப்பட்டு கணக்கிடப்படும். இது குறித்து ஆணையர் முடிவே இறுதியானதாகும்.

17) வீட்டிணைப்புகளின் பயன் குழாயில் யாதொரு கைவிசை நீரேற்றுக் குழாய் அல்லது விசை நீரேற்றுக் குழாய்களைப் பொருத்த அனுமதிக்கப்படமாட்டாது. அவ்வாறு பயன்படுத்துவது கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித முன் அறிவிப்புமின்றி குடிநீர் இணைப்புத் துண்டிக்கப்படும்.

18) குடிநீர்க் குழாய்களைத் தொட்டி அல்லது சேமிப்புத் தொட்டியுடன் நேரடியாக இணைக்கப்படலாகாது. இந்த இணைப்பு துணை விதிகள் 23 மற்றும் 24க்கு பொருந்தாது.

19) ஒவ்வொரு வீட்டின் உரிமையாளர் மற்றும் குடியிருப்போர் நகராட்சியிலிருந்து குடிநீர்க் குழாய் இணைப்பு பெற்று இருந்தால் அதை நல்லமுறையில் வைத்துக்கொள்ள வேண்டும். பழுதுகள் ஏற்பட்டால் அவருடைய சொந்தச் செலவில் உரிய அனுமதி பெற்று நகராட்சிப் பணியாளர்கள் முன்னிலையில் பழுது பார்க்க வேண்டும். மேலும், அதற்கான மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்பார்வைக் கட்டணம் செலுத்த வேண்டும்.

20) குடிநீர் குழாயில் உள்ள நிலையை பரிசோதனை செய்யும் பொருட்டு அந்தக் குடிநீர் குழாயின் இணைப்பில் உள்ள குழாய் அல்லது இணைப்புகளை ஆணையர் அகற்றலாம். அவ்வாறு பரிசீலனை செய்யும் போது அல்லது வேறு காரணங்களினாலோ குழாய்கள் அல்லது அவற்றின் இணைப்புக்களோ பழுதுபட்டு இருந்தால் இதைப் பழுது நீக்குவதற்கோ அல்லது புதிய இணைப்புகளில் பொருத்துவதற்கோ சரி செய்வதற்கோ ஆணையரால் குடியிருப்பில் உள்ள உரிமையாளர் அல்லது குடியிருப்போர்க்கு ஒரு திங்கள் காலவரை கொடுத்து ஒரு அறிவிப்பு கொடுக்கப்படும். அறிவிப்பில் கொடுக்கப்பட்ட காலவரைக்குள் பழுது நீக்கப்படவில்லை என்றாலும் இணைப்புகளைச் சரி செய்யவில்லை என்று தெரியவருமேயானாலும் பழுது காரணமாக இணைப்புகளில் நீர் விரையமாகும் அல்லது குடிநீர் தூய்மை கெடும் எனக் கருதினால் ஆணையர் இந்தக் குழாய் இணைப்புகளையும் மற்ற இதர பணிகளையும் நகராட்சி பணியாளர்கள் மூலம் முடித்து அதற்காகும் செலவினை வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்போரிடம் இருந்து வசூல் செய்யப்படும். அவ்வாறு இல்லையென்றால் இணைப்புத் துண்டிப்பு செய்து விட்டு இணைப்பிற்கு குடிநீர் வழங்குவதை நிறுத்தம் செய்யலாம்.

21) குடும்பப் பயன்களுக்காக வழங்கப்பட்ட வீட்டுக்குழாய் இணைப்பிலிருந்து கிடைக்கும் குடிநீரை ஆணையரின் எழுத்து மூலமாக முன் அனுமதியின்றி குடும்பப் பயன்கள் அல்லாது பிற காரணங்களுக்கும் பயன்படுத்தக்கூடாது. ஆனால் ஒரு குழாய் இணைப்பின் உரிமையாளர் இணைப்புள்ள வீட்டின் குடியிருப்பாளர் குடும்பப் பயன்களுக்கான குடிநீரை அவையில்லாத பிறவற்றிக்குப் பயன்படுத்துவதாக ஆணையர் அறியவரின் அல்லது அவ்வாறு நம்புவதற்குக் காரணங்கள் இருந்தாலும் அவர் தாம் அறிவிக்கும் நாளிலிருந்து துணை விதி 12ன் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள குடும்பப் பயன்களுக்கு அல்லாத விகிதத்தில் கட்டணத்தை செலுத்துமாறு உரியவரை தன்னிடமுள்ள ஆதாரப்புள்ளி விவரங்களின் அடிப்படையில் கேட்டுக் கொள்ளலாம்.

அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை வீட்டிணைப்பின் உரிமையாளர், குடியிருப்போர் செலுத்தத் தவறினால் அந்த வீட்டிணைப்பை துண்டித்துவிட ஆணையர் ஆணை பிறப்பிக்கலாம்.

22) அ) நகராட்சியில் இருந்து பெறப்பட்ட குடிநீர்க் குழாய் இணைப்பில் யாதொரு கருவியை வைத்து நீரேற்று குழாயை அமைத்தல் அல்லது விசை நீரேற்றும் கருவி இணைப்பு குழாய் அல்லது அசையும் குழாய் அது போன்ற எந்த ஒரு அமைப்பையும் குடிநீர் இணைப்பில் பொருத்தி பெரும் குழாயில் இருந்து குடிநீர் ஈர்க்கப்படக் கூடாது. அவ்வாறு ஈர்ப்பது கண்டுபிடிக்கப்பட்டால் இணைப்பு துண்டிக்கப்படுவதுடன் மின் மோட்டார் மற்றும் ஏனைய கருவிகள் பறிமுதல் செய்யப்படும். பொருட்கள் யாதும் திருப்பி தரப்பட மாட்டாது. மீண்டும் மின் இயக்கி மற்றும் ஏனைய கருவிகள் பொருத்த மாட்டேன் என்று உறுதிமொழியுடன் ரூ.7000/- அபராதத் தொகை பெற்றுக் கொண்ட பின்புதான் இணைப்பு வழங்கப்படும். மேலும், மேற்படி குடிநீர் இணைப்புக்குரிய குடிநீர் கட்டணத்தின் 3 வருடத் (ஆறு அரையாண்டுகள்) தீர்வையினைக் கூடுதல் தண்டத் தொகையாகச் செலுத்த வேண்டும்.

ஆ) இரண்டாவது தடவையாக குடிநீர் இணைப்புகளில் மின் இயக்கி மற்றும் ஏனைய கருவிகளை வைத்து குடிநீர் உறிஞ்சுவது கண்டுபிடிக்கப்பட்டால் நிரந்தரமாக குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும். மேலும், நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

23) குடிநீர் இணைப்பு வேண்டி மனு செய்யும் அனைத்து மனுதாரர்களும் மழை நீர் சேகரிப்பு அமைப்பு அமைத்திருக்க வேண்டும். நகராட்சி குடிநீர் திட்டத்திலிருந்து நீர் வழங்கப்பெறும் தனியார் கழிப்பிடம், பொதுக்கழிப்பிடம், சிறுநீர் கழிப்பிடம், மலக்கழிப்பிடம் ஆகியவை ஆணையரால் முடிவு செய்யப்படும். அளவில் மற்றும் தனிமையில் அவரால் குறிக்கப்படும் இடத்தில் அமைக்கப்பட்ட தொட்டி ஒன்றுடன் கூடியதாக இருக்க வேண்டும்.

24) கொதி கலன்களுக்கு நகராட்சியில் பகிர்மானக் குழாய்களிலிருந்து தேவைப்படுமானால் அதற்கான தனியான தொட்டியிலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர குழாயிலிருந்து நேரடி இணைப்பு வழங்கப்படமாட்டாது. ஒவ்வொரு தொட்டிக்கும் தனியாக பந்து திறப்பான், கண்காணிக்கும் அல்லது எச்சரிக்கை சாதனங்கள் பொருத்தப்பட்டு அவைகளை சரியான முறையில் அணுகி ஆய்வு செய்வதற்கு தகுந்தவாறு அமைக்கப்பட வேண்டும்.

25) தீ விபத்து நேரிடும் நேரம் தவிர மற்ற நேரங்களில் நகராட்சி ஆணையர்/பொறியாளர் அவர்களின் அங்கீகாரம் பெறாமல் பிரதானக்குழாய் அல்லது பகிர்மானக்குழாய் திறப்பான்கள் தீயணைப்புக்கு வைக்கப்பட்டிருக்கும் நீர்க் கருவிகள் ஆகியவற்றை நிறுத்துதல் அல்லது தடை ஏற்படுத்துதல் கூடாது.

26) ஆணையர் அவர்கள் ஆணையின் பேரில் திருமணம் மற்றும் இதர நேர்வுகளில் ஒரு கட்டிடத்திற்குத் தற்காலிகமாக இணைப்பு வழங்கப்படும். இந்த இணைப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.1000/- பெருங்குழாயுடன் இணைக்கும் இணைப்பிற்கு ரூ.500/-ம் அதை திரும்பத் துண்டிக்கும் போது ரூ.500/-ம் கட்டணமாக வசூலிக்கப்படும். இவ்வாறு கொடுக்கப்படும் இணைப்பு 15எம்.எம். அளவுள்ள சேதமற்ற குழாய் ஒன்று 3 மீட்டர் கொண்டதாக இருக்கும். இவ்வாறு இணைப்பு கேட்டவர்களுக்கு தற்காலிகமாக இணைப்பு கொடுக்கப்படும். கட்டிடத்தின் உரிமையாளர்களோ இந்த இணைப்பு செய்வதற்கு தேவையான பொருள்கள் மற்றும் இதர உபகரணங்கள் அவர்கள் பொறுப்பிலும், சொந்தசெலவிலும் செய்து கொள்ள வேண்டும். கூடுதலாக குழாய்கள் தேவைப்படின் ஒவ்வொரு குழாய்க்கும் நாள் ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.500/- வீதம் வசூல் செய்யப்படும். மேற்படி தற்காலிக இணைப்பு ஒவ்வொரு தருணத்திலும் 5 நாட்களுக்கு மேற்படக்கூடாது.

27) அ) குடிநீர் இணைப்பில் பொருத்தப்பட்ட அளவுமானியை எவரும் வைக்கப்பட்டுள்ள முத்திரை நீக்கவோ அல்லது பூட்டை உடைக்கவோ அல்லது அளவுமானியின் மீது பொருத்தப்பட்ட கண்ணாடியை சேதம் செய்யவோ அல்லது அளவுமானியை திறக்கவோ அல்லது அதன் மீது உள்ள குறிப்பை மாற்றவோ அல்லது அளவுமானி கணக்கிடும் நீரின் அளவைப் பதிவு செய்யும் பகுதியை தடை செய்யவோ கூடாது.

ஆ) குடிநீர் வழங்கும் அளவுமானிக் கருவி பதிவு செய்வதற்கு முன்னால் குடிநீரை எடுக்கும் முறையை தவிர்க்க வேண்டும்.

இ) அளவுமானி அளவு பதிவு செய்வதைத் தவிர்க்க அளவுமானியை சேதப்படுத்தவோ அல்லது அளவுமானியை களவாடிச் செல்வதையோ அனுமதிக்கப்பட மாட்டாது. அல்லது அதற்குக் காரணமாக இருத்தல் கூடாது.

28) அ) இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் கொடுக்கப்பட்ட எல்லா குடிநீர் இணைப்புகளுக்கும் பொருந்தும். குடியிருப்புஅல்லாத உபயோகத்திற்காக கொடுக்கப்படும் இணைப்புகளுக்கும் பொருந்தும். அவ்வாறு உள்ள குடிநீர் இணைப்புகள் பயன்படுத்தப்பட வேண்டுமானால் நகராட்சிக்குச் செலுத்தப்பட வேண்டிய எல்லாக் கட்டணங்களையும் குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் ஏற்றுக்கொண்டால் அவ்விணைப்புகள் அதிகாரப்பூர்வமாக செல்லத்தக்கதாய் ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தொகை செலுத்தத் தவறினால் இந்த இணைப்புகளை நகராட்சியின் ஒப்புதல் பெறாத இணைப்புகளாக கருதி குழாய் இணைப்பு நிரந்தரமாகத் துண்டிக்கப்படும்.

ஆ) குடிநீர் இணைப்புகளுக்கு ஏற்கனவே நடைமுறையில் இருந்த செயல்முறைகள் திருத்தப்பட்ட துணை விதிகள் அமுலுக்கு வரும் நாளிலிருந்து செல்லத்தக்கவை ஆகாது.

இ) புதிதாகக் குடிநீர் இணைப்புப் பெற விரும்புகின்றவர்கள் நகராட்சிக்கு நடப்பு நிதி ஆண்டு முடிய உள்ள காலத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள், வரியில்லா இனங்கள் ஆகியவைகளை செலுத்தி அதற்கான இரசீது நகல்கள் இணைத்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

